**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044– 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 175/மா/2022**

**நாள் : 28.11.2022**

திரு. G. தேவா,
வடபழனி, சென்னை. – முறையீட்டு மனுதாரர்

1. செயற்பொறியாளர்,
2. உதவி செயற்பொறியாளர்,
3. உதவி நிர்வாக பொறியாளர்,
மண்டலம் - 9,பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்கள்

பெருநகர சென்னை மாநகராட்சி, வடபழனி, கருமாரி அம்மன் கோயில் தெரு, எண்.1, பிளாசா மேனர் பிளாட், C-50 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. G. தேவா என்பவரின் 17.09.2022 நாளிட்ட மனு 19.09.2022 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 175/மா/2022 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, வடபழனி, கருமாரி அம்மன் கோயில் தெரு, எண்.1, பிளாசா மேனர் பிளாட், C-50 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. G. தேவா என்பவரின் முறையீட்டு மனுவில்,

"பெருநகர சென்னை மாநகராட்சி, வார்டு -113, பகுதி – 26, மண்டலம் - 9, கதவு எண்.2/22, பெரியார் சாலை, தி.நகர், சென்னை – 600 017 என்கின்ற முகவரியில் பெருநகர சென்னை மாநகராட்சியின் அங்கீகரிக்கப்பட்ட வரைபட நகலின்படி அடுக்குமாடி வீடு கட்டாமல், விதிமுறைக்கு மீறி தரைதளம் வாகனம் நிறுத்துமிடம், முதல் தளம், இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளங்களில் குடியிருப்பு (Flats) கட்டிடம் கட்டி விற்பனை செய்துள்ளார்கள்.

இது சம்மந்தமாக தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் 12.02.2022 அன்று நான் விண்ணப்பித்த விண்ணப்பத்திற்கு தகவல் வழங்கவில்லை. பின்பு 15.03.2022 அன்று முதல் மேல்முறையீட்டு விண்ணப்பம் அனுப்பினேன். அதற்கும் தகவல் வழங்கவில்லை, பிறகு 18.04.2022 அன்று இரண்டாம் மேல்முறையீட்டு விண்ணப்பம் அனுப்பினேன். அதற்கு பொது தகவல் அலுவலர் 13.5.2022 அன்று தகவல் வழங்கினார்கள். வழங்கிய தகவலில் திருப்தி இல்லையென்று தகவல் பெறும் உரிமைச்சட்டம் 18(1)ன்படி புகார் மனு 21.5.2022 அன்று அனுப்பியுள்ளேன்.

தகவல் பெறும் உரிமைச்சட்டத்தில் 6 தகவல் கேட்டிருந்தேன் அதில் 1 தகவலுக்கு மட்டுமே தகவல் வழங்கினார்கள். கட்டிட வரைபட நகல் கேட்டிருந்தேன் 3ஆம் நபரின் தகவல் வழங்க இயலாது என்று தகவல் வழங்க பொது தகவல் அலுவலர் மறுக்கிறார்.

ஒரு சதவீதம் கூட உயர்நீதிமன்றம் W.P.No.14520/2017 உத்தரவை மேற்கண்ட மண்டலம் - 9ன் அலுவலர்கள் பின்பற்றவில்லை. பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் செ.வெ.எண்.97, நாள்:21.04.2022படி கட்டிடம் கட்டுவதை மேற்கண்ட மண்டலம் -9ன் செயற்பொறியாளர்-I திரு.பானுகுமார், Unit 26ன் உதவி செயற்பொறியாளர் திரு. சித்ரா மற்றும் 113-வது வார்டு உதவி நிர்வாக பொறியாளர் ஆகியோர் பின்பற்றவில்லை.

பெருநகர சென்னை மாநகராட்சி செ.வெ.எண்.245 நாள்:21.08.2022ன் படி பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனுமதி பெறுபவர்கள் கட்டிட மற்றும் திட்ட அனுமதியில் குறிப்பிட்டுள்ளவாறு அளவு மற்றும் விவரக்குறிப்பின் அடிப்படையில் தான் கட்டடங்களை கட்ட வேண்டும். அனுமதியில் குறிப்பிடப்படாத, விதிமுறைகளை மீறி கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் கண்டறியப்பட்டு கட்டட உரிமையாளர்களுக்கு குறிப்பாணை வழங்கப்படும். மேலும், தகுந்த விவரங்கள் மற்றும் போதிய ஆவணங்கள் இல்லாத பட்சத்தில் சம்பந்தப்பட்ட கட்டடத்தை மூடி சீல் வைக்க குறிப்பாணை வழங்கப்பட்டு, குறிப்பிடப்பட்ட காலக்கெடுவிற்கு பிறகு மாநகராட்சி அலுவலர்களால் மூடி சீல் வைக்கப்படும் என்று உள்ளது. Pre Notice has been issued to the building கொடுத்துவிட்டு தன் கடமை முடிந்ததாக Unit 26 உதவி செயற்பொறியாளர் மற்றும் 113வது வார்டு உதவி நிர்வாக பொறியாளர் உள்ளனர். Lock and Seal கொடுக்கவேண்டிய கட்டிடத்திற்கு Pre Notice has been issued to the building என்று Notice வழங்குகிறார்கள். மேற்கண்ட விதிமீறல் கட்டிடத்திற்கு Pre Notice has been issued to the building வழங்கிய பிறகும் இன்றும் அங்கு வேலை நடந்து கொண்டிருக்கிறது.

ஆகவே, ஐயா அவர்கள் மேற்கண்ட விதிமீறல் கட்டிடத்தின் உரிமையாளரிடம் நாங்கள் அனுப்பிய தகவல் பெறும் உரிமைச் சட்டம் மனுவை காண்பித்து கையூட்டு பெற்றுக்கொண்டு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரின் செய்தி குறிப்பாணையைய் துச்சமென நினைத்தும் மற்றும் அனுமதியில்லாத கட்டடம் மீது நடவடிக்கை வாரம் ஒருமுறை கூட்டம் நடத்த உத்தரவு என்று உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அளித்த உத்தரவையும் மதிக்காமல் செயல்படும் மண்டல்-9ன் செயற்பொறியாளர்-I திரு.பானுகுமார், Unit 26ன் உதவி செயற்பொறியாளர் திரு. சித்ரா மற்றும் 113வது வார்டு உதவி நிர்வாக பொறியாளர் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொளகிறேன்."

**2) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவ அழைப்பாணைகள் மூலம் 17.11.2022 அன்று நேரடி விசாரணைக்கு அழைக்கப்பட்டனர்.**

**முறையீட்டு மனுதாரர் 17.11.2022 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :**

"பெருநகர சென்னை மாநகராட்சி, வார்டு 113, மண்டலம் 9, தி. நகர், பெரியார் சாலை, கதவு எண்.2/22 என்கின்ற முகவரியில் பெருநகர சென்னை மாநகராட்சியின் அங்கீகரிக்கப்பட்ட வரைபட நகலின்படி அடுக்குமாடி வீடு கட்டாமல், விதிமுறைகளை மீறி கட்டடம் கட்டி விற்பனை செய்துள்ளனர். இது தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ல் புகார் மனு அளித்தும், மேற்கண்ட அடுக்குமாடி குடியிருப்பின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, மேற்கண்ட விதிமீறல் கட்டிடத்தின் மீது உரிய நடவடிக்கை எடுத்திடவும், விதிமுறைகளை மீறி கட்டப்பட்ட மேற்கண்ட கட்டடத்தின் மீது நடவடிக்கை எடுக்கத் தவறிய மண்டல அலுவலகத்தைச் சேர்ந்த அலுவலர்கள் மீது தேவையான நடவடிக்கை எடுக்குமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**17.11.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகிய மண்டலம்–9ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் ஆகிய இருவரும் தங்களது வாக்குமூலத்தில் :**

"மனுதாரர் குறிப்பிட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி, வார்டு 113, மண்டலம்-9, தி. நகர், பெரியார் சாலை, கதவு எண். 2/22 என்கின்ற முகவரியில் அமைந்துள்ள அடுக்குமாடிக் கட்டடம் விதிகளை மீறி கட்டப்பட்டுள்ளதாக தெரிவித்து மனுதாரரிடமிருந்து புகார் மனு பெறப்பட்டதும், அக்கட்டிடத்திற்கு 15.11.2022 அன்று Pre Notice தாக்கீடு வழங்கப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தையும், அதன் தொடர் நடவடிக்கையாக 15.11.2022க்குப் பின்னர் அவகாச நாட்களான 15 நாட்களுக்குப் பின்னர், Lock and Seal Notice மற்றும் De-Occupation Notice வழங்கப்படும் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்'' எனத் தெரிவித்துள்ளார்.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 9ன் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் மண்டல அலுவலர் ஆகியோரிடம் கோரப்பட்டது. அவர்கள், தனது 15.11.2022 நாளிட்ட அறிக்கையில்,**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-9, பகுதி-26, வார்டு-113ல் கதவு எண்.2/22 பெரியார் சாலை, தி.நகர், சென்னை – 600 017 என்ற முகவரியில் விதிகளை மீறி கட்டடம் கட்டி வருவது சம்பந்தமாக திரு. ஜி. தேவா அவர்களிடம் இருந்து புகார் மனு பெறப்பட்டது.

பெறப்பட்ட மனுவின் அடிப்படையில் மேற்கண்ட கட்டடத்தினை சம்பந்தப்பட்ட உதவி பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் ஆகியோரால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட விதிமீறல் கட்டடத்தின் மீது நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு 15.11.2022 அன்று Pre Notice தாக்கீது வழங்கப்பட்டுள்ளது. மேலும் விதி மீறல் கட்டடத்தின் மீது தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரின் வாக்குமூலம், அறிக்கை ஆகியவை பரிசீலிக்கப்பட்டது. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர் சென்னை, தி.நகர், பெரியார் சாலை, கதவு எண்.2/22ல் கட்டப்பட்ட அடுக்குமாடி குடியிருப்பு பெருநகர சென்னை மாநகராட்சியின் வரைபட நகலின்படி கட்டாமல், விதிமீறி தரைதளம், வாகனம் நிறுத்துமிடம், முதல் தளம், இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளங்களில் பிளாட் கட்டியதாகவும், இது குறித்து புகார் மனு அளித்தும் மண்டலம் -9ன் அலுவலர்கள் நடவடிக்கை எடுக்கவில்லையெனவும், அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டவாறு, சென்னை தி.நகர், பெரியார் சாலை, கதவு எண்.2/22ல் கட்டப்பட்ட அடுக்குமாடி குடியிருப்பு திட்ட அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ளது என ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது. மேலும், அக்கட்டடத்திற்கு 15.11.2022 அன்று Notice தாக்கீது வழங்கப்பட்டுள்ளது என மண்டலம் - 9ன் உதவி பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் மண்டலம் -9ன் மாவட்ட வருவாய் அலுவலர் (ம) மண்டலம் அலுவலரின் அறிக்கையின் மூலம் அறியப்படுகிறது. 15.11.2022-க்குப் பின்னர் அவகாச நாட்களான 15 நாட்களுக்குப் பின்னர் Lock and Seal தாக்கீது மற்றும் De-Occupation தாக்கீதும் வழங்கப்படும் என்று மண்டலம்-9ன் உதவி செயற் பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

**The field officals concerned in this case had not taken any action before the complaint was made by the petitioner. Had they acted in time the violations could have been arrested and necessary remedial steps could have been enforced. This betrays a real state of complicity, collusion, indirect abetting tendency, dereliction of duties and total lack of work ethics on the part of the officials right from the Assistant Commissioner who is the team leader of the Zonal level down to the last Corporation filed functionary. The Greater Chennai Corporation Commissioner is directed to initiate stringent disciplinary action against all the delinquent official involved in this issue.**

**The process of issuing notices and eventual final stage as envisaged in the Town and Country Planning Act, Chennai Corporation Act, Tamil Nadu Municipality Act should be completed within the rigorous time frame as per Rules. The Deputy Commissioner of this Zone should be appropriately**

**instructed to pursue action in the case without any let up. An action taken report should be sent to this Forum in due course.**

2022-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 28-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. G. தேவா,
   C-50, பிளாசா மேனர் பிளாட்,
   எண்.1, கருமாரி அம்மன் கோயில் தெரு,
   வடபழனி, சென்னை – 600 026.
2. அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
3. துணை ஆணையர், (Works)
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
   *He is requested to ensure the implementation of this order*
4. செயற் பொறியாளர்,
   உதவி செயற் பொறியளார்,
   உதவி நிர்வாகப் பொறியாளர்,
   மண்டலம்–9, பெருநகர சென்னை மாநகராட்சி,
   எண்.1, 4வது குறுக்குத் தெரு, லேக் ஏரியா,
   நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.
5. துணை ஆணையர்,
   மண்டலம்–9, பெருநகர சென்னை மாநகராட்சி,
   எண்.1, 4வது குறுக்குத் தெரு, லேக் ஏரியா,
   நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.
   *He is requested to ensure the implementation of this order*
6. கண்காணிப்பு பொறியாளர்,
   மழைநீர் வடிகால்துறை,
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல் : மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக.